**கங்க இஹல கோரலை பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கங்க இஹல கோரலை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத மத்தியநிலையத்தில் காணப்பட்ட மருந்துப் பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 215,160 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மலையக எழுச்சி ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டிராத 03 கைத்தொழில்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 தொகையான கைத்தொழில் கடன்கொடுத்தோர் ஏற்பாடு தொடர்ந்து கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, மீள விற்பனை செய்யப்படக்கூடிய சொத்துக்களாக பரிந்துரைக்கப்பட்ட ரூபா 126,949 கூட்டுப் பெறுமதித் தொகையான 14 சொத்துக்களும் 16 சேதப்படுத்த வேண்டிய சொத்து விடயங்களும் ஏலவிற்பனை செய்யப்படுவதற்கோ அல்லது சேதமாக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது, 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் கணக்குகளில் இருந்து பதிவளிக்கப்பட்டு ஏலவிற்பனை செய்யக்கூடிய பொருட்கள் 2016 மே 05 ஆம் திகதி ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஈ) சபையால் கட்டுப்படுத்தப்படும் சபையிடம் உள்ள 02 விளையாட்டு மைதானங்களினதும் 02 வாகனத் தரிப்பிடங்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 25,000 தொகையான பெறுமதியான 17 மயானங்கள் காண்பிக்கப்பட்ட

போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி, 21 மயானங்கள் காணப்பட்டன.

(ஊ) அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த உரிமை கையேற்கப்பட்டிராத ரூபா 51,762,098 பெறுமதியான 03 இயந்திர உபகரணங்கள் கணக்கீட்டுக் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

07 கணக்கு விடயங்களுக்கு உரித்தான பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட மீதிகளும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையே ரூபா 188,894 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய கணக்குகள்**

11 கணக்கு மீதிகளில் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 32,600,111 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,301,017 ஆகக் காணப்பட்டது.

**1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

செலுத்தப்பட வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 21,419,776 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,180,135 ஆகக் காணப்பட்டது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 85,675,041 பெறுமதியான 34 காணி கட்டிடங்களிற்கான உறுதி அல்லது கையேற்புக் கட்டளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 பிரதேச சபை அதிகாரச்சட்டம் 19 (xi, xii) துணைப் பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது சபையிடம் உள்ள ஓர் கட்டிடம் ஒன்று 30 ஆண்டு கால எல்லைக்காக ரூபா 20,000 தொகையான மாதாந்த வாடகைத் தொகைக்கு மக்கள் வங்கிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதி | |
| | 218 | சுபையிடம் உள்ள சகல காணி கட்டிடங்களும் வருடாந்தம் பரீட்சிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,127,661 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,728,674 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,398,987 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | ஆண்டின் போது பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | | | 2015 ஆம் ஆண்டின் நிலுவையில் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் | மொத்த கூட்டுத் தொகை | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 1,756,578 | 908,565 | 568,473 | 468,793 | 967,412 | 1,627,877 |
| வாடகை வருமானம் | 778,124 | 4,229,218 | 392,202 | 3,755,092 | 4,147,294 | 860,048 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | 707,100 | -- | 707,100 | 707,100 | -- |
| ஏனைய வருமானம் | 2,226,543 | 11,679,007 | 319,633 | 1,176,829 | 1,496,462 | 12,409,158 |
| மொத்தம் | | | | | | 14,897,083 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,897,083 தொகையான மொத்த வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.2 வீத வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீத வரி ரூபா 1,692,370 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான பட்டியல்படுத்தல்கள் ரூபா 830,753 ஆகக் காணப்பட்டது. இதில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் முறையே ரூபா 566,505 தொகயும் ரூபா 383,436 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. இது நூற்றுவீதமாக 33 சதவீதமாகவும் 46 சதவீதமாகவும் காணப்பட்டன.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதவரி மீதியில் 01 வருடத்திற்கும் 22 வருடங்களிற்கும் இடையிலான காலப்பகுதியின் போது வீத வரி செலுத்தத் தவறியிருந்தவர்கள் 315 ஆனதுடன் அவர்களிடம் இருந்து ரூபா 1,077,990 ஐப் பார்க்கிலும் கூடுதலான தொகை சபைக்கு அறவிடப்பட வேண்டியதாகக காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களும் 08 மாதங்களுக்கும் இடைப்பட்ட வீச்சிற்கு உரித்தான 38 அரசாங்க நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான வீதவரி மீதி ரூபா 241,770 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு, வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையால் 2007 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாது, பழைய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டிற்கும் வீதவரி பட்டியலிடப்பட்டிருந்தது.

(உ) வீதவரிக் கொடுப்பனவை மேற்கொள்ளத்த தவறிய 68 நபர்களிற்கு மீளாய்வாண்டின் யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது சிவப்பு எச்சரிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் இதில் 22 பேர் பணம் செலுத்தியிருக்கவில்லை. அவர்கள் தொடர்பாக எவ்வித தொடர்நடவடிக்கையும் சபையால் எடுத்திருக்கவில்லை.

**2.2.3 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய அத்கால வியாபாரச் சந்தைத் தொகுதியில் 07 கடைகள் சட்டரீதியாக ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2008 ஆம் ஆண்டின் போது வெளித் தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இக்

கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை மூலத் தொகையான ரூபா 1,775,141 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, இச் சந்தைத் தொகுதியில் 16 கடைகள் மூடப்பட்டிருந்தன.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 860,048 தொகையானதுடன் இந் நிலுவையாக உள்ள கடை வாடகை 01 மாதம் முதல் 09 மாதங்கள் வரையான காலவீச்சிற்கு உரித்தானதாகும். இந் நிலுவையில் மேலும் ரூபா 566,941 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தமை குறித்து செயலாளர் 2016 யூலை 20 ஆம் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) மேற்குறித்த நிலுவை மீதியில் 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் குறுதுவத்த நகர அபிவிருத்தியின் போது சேதமுற்ற மற்றும் உடைத்து அகற்றப்பட்ட 12 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 138,626 தொகையாகக் காணப்பட்டதுடன் இத் தொகையை அறவிடப்படுவதற்கோ அல்லது ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையிடம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த 13 கடைகள் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2016 மார்ச் 04 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் ரூபா 15,000 தொகையான மாதாந்த மதிப்பீட்டு வாடகை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதேச சபையின் பழைய கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையால் பராமரிக்கப்படும் 1496 சதுர அடி அளவிலான கட்டிடம் 2010 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத் தீர்மானத்தினத்தின் படி ரூபா 1,000 தொகையான மாதாந்த வாடகைக்கு 02 வருடங்களுக்கு குத்தகைக்கிடப்பட்டிருந்தது.

(i) கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டு 2016 யூன் 15 ஆம் திகதி வரையில் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) உரிய நிறுவனத்திடம் இருந்து எந்தவித குத்தகை வாடகையும் அறவிடப்பட்டிராததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 63,000 தொகையான வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக சபை எந்தவித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 ஏக்கர் வரி

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையான ஏக்கர் வரி ரூபா 64,208 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 வரை பட்டியலிடப்பட்டவை ரூபா 24,327 தொகையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் முறையே ரூபா 1,968 தொகையும் ரூபா 15,502 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இது சதவீதமாக 03 சதவீதமாகவும் 64 சதவீதமாகவும் காணப்பட்டது. இதன் படி,

ஏக்கர் வரி சேகரிப்பு நலிவான நிலையில் காணப்பட்டதுடன் இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 காணி வரி

குறுதுவத்த 01 ஆம் இலக்க நிலக் கூறில் குத்தகையாளர்களின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 114,665 ஆகக் காணப்பட்டதுடன் இத் தொகை 03 வருடங்களுக்கு அண்மித்த காலமாக நிலுவையாகக் காணப்பட்ட போதிலும், உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, குத்தகைக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பான விபரம் காணியின் அளவு தொடர்பான தகவல்கள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீர்க் கட்டணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர்ச் செயற்திட்டம் செயலிழந்தமையால், 09 பிரதேசங்களில் நீர் பட்டியலிடப்படுவது இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அப் பிரதேசங்களில் சில வருட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 73,159 தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மல்வத்தகம மற்றும் லென்டன் ஹில் இல் உள்ள 97 நீர் இணைப்புகளில் 12 இற்கு நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய சகல நீர் இணைப்புகளிலும் நீர் மானி பொருத்தப்படாது நிலையான ஓர் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் இச் சகல நீர் நுகர்வாளர்களிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 179,248 தொகையான நீர்க் கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 213,168 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,000,000 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டது. இத் தொகையில் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 27,166 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 3,285,630 தொகையுமே மேலும் பெறவேண்டியதாக உள்ளதாக செயலாளரால் 2016 யூலை 20 ஆம் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

(ஆ) 2015 வருடாந்த மதிப்பீட்டின் கீழ் வறுமையில் உள்ள மக்களுக்கு சலுகை வழங்கப்படுவதற்காக 607(5) செலவின விடயத்தின் கீழ் ரூபா 250,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய ஆண்டின் போது அச் செயற்பாடு மேற்கொள்ளப்படாது, அவ் ஏற்பாட்டுத் தொகை

கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் அவ் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு 2016 மார்ச் 21 ஆம் திகதி ரூபா 87,500 பெறுமதியான 125பாடசாலைப் புத்தகப்பைகள் பெறப்பட்டிருந்த போதிலும் 2016 யூன் 15 ஆம் திகதி வரையில் அப் பைகள் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் பல்வேறு பதவிகளில் 10 வெற்றிடங்கள் நிலவியதுடன் 06 மேலதிகப் பதவிகளும் காணப்பட்டன.

## 3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதிலும் முன்னைய 02 ஆண்டுகளின் போதும் கிடைக்கப்பெற்றிருந்த 284 கட்டிட விண்ணப்பங்களில் 176 விண்ணப்பங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ்கள் 24 விண்ணப்பங்களிற்காக மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போதிலும் முன்னைய 02 ஆண்டுகளின் போதும் அதிகாரமற்ற 26 நிர்மாணிப்புகள் கண்டறியப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எந்தவித சட்ட நடவடிக்கையும் அல்லது ஏற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபை பழைய அலுவலகக் கட்டிடம் அமைந்துள்ள களஞ்சியத்தில் அகற்றப்பட்ட உடைந்த பொருட்கள் ஆங்காங்கே குவிக்கப்பட்டு உக்கலடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை 2016 யூன் 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறே களஞ்சியப் பொருட்கள் எளிதில் இனங்காணப்படக் கூடிய வகையில் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

### 3.3.1 பிரதேச சபைக் கட்டிடத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவரும் எஞ்சிய பகுதிக்கு கிரீன் கேட் வலையும் அமைத்தல் - ரூபா 1,598,721

இத் துறை தொடர்பாக 2016 யூன் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) சுவரின் இறுதிப் பகுதியில் 3.8 மி. தொலைவில் சுவர் மேலிருந்து அடி வரை வெடிப்புற்று சுவர் தாழ்வடைந்திருந்ததுடன் அச் சுவரின் வெளிப்பகுதியின் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு தூண் கழன்றிருந்தது. இவ்வாறே, சுவரின் தொடக்கப்பகுதியிலும் ஒரு பகுதி வெடிப்புற்றிருந்தது.

(ஆ) வேலை விடயம் இல. 02 இன் படி, 1:3:6 (1 1/2)" கொங்கிரீட் கலவை இடப்பட்டு 0.22 மீற்றர் தடிப்பில் பாதுகாப்பு சுவர் அடிப்பாகம் கொங்கிரீட இடப்பட வேண்டிய போதிலும், பௌதீகப் பரிசோதனையின் படி, அவ் அடிப்பாகத்தின் கொங்கிரீட் தடிப்பம் 0.1 மீற்றர் ஆகக் காணப்பட்டதுடன்

அக் கொங்கிரீட் எளிதில் உடையக் கூடிய நலிவான கலவை இடப்பட்டிருந்தது.

(இ) தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் விலைகளின் படி நிர்மாணிப்புகளுக்காக உடன்படிக்கையிடப்பட்டு வேலை பூர்த்திசெய்யப்பட்டதை அடுத்து மதிப்பிடப்பட்ட விலைகளைப் பார்க்கிலும் கூடுதலான விலைகள் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக 03 வேலை விடயங்களிற்கு ரூபா 160,945 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மேற்குறித்த பாதுகாப்புச் சுவரின் அத்திவாரம் இடப்படும் நடவடிக்கைகளுக்காக சபை ஊழியர்கள் 04 நாட்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், துறைக்கு உரித்தான பட்டியலில் 01 வேலை விடயத்தின் படி, 25 கன மீட்டரிற்காக ரூபா 22,417 தொகை ஒப்பந்தச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3.2 உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தல்

--------------------------------------------------------

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் தனியார் நிர்மாணிப்புக் கம்பனிகளுடன் 2010 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கையிடப்பட்ட அலுகொல்ல மயானத்தின் வீதி, வல்லஹகொட உடகம வீதி மற்றும் கரகல வவுல்லன எனும் வீதி நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ் வீதிகளின் நிர்மாணிப்புகளின் தரம் நலிவாகக் காணப்பட்டமையால் குறுகிய காலத்திற்குள் அவ் வீதிகள் சேதமுற்றிருந்தன.

இச் செயற்திட்டங்களிற்கு உரித்தான பணத்தில் 35 சதவீதமான ரூபா 2,425,894 தொகை வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அத் தொகையைப் பயன்படுத்தி மேற்குறித்த வீதிகளின் குறைபாடுகள் சீராக்கப்படுவதற்கு 2015 ஏப்ரல் 27 ஆம் திகதிய பொதுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 உடகம போதிக்கு அருகாமையில் இருந்து கொஹொவல பன்சலை வரை படிகள் அபிவிருத்தி செய்தல் - ரூபா 156,039

------------------------------------------------------------------------------------------

இத் துறைகள் தொடர்பாக 2016 யூன் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் இருந்து பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

மதிப்பீட்டின் படி, 1:2:4 (3.˙.4)" கொங்கிரீட் கலவையில் 4" தடிப்பிற்கு கொங்கிரீட் வீதிப் பகுதியும் படிகளும் அமைக்கப்பட வேண்டிய போதிலும், அப் பகுதிகளில் சிலதை உடைத்துப் பரீட்சிக்கையில் அப் பகுதிகளின் தடிப்பம் 1 ½" இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறே, வீதிப் பகுதிகளுக்கும் படிகளுக்கும் இடப்பட்ட கொங்கிரீட் எளிதில் உடையக் கூடிய மிக நலிவான நிலையில் காணப்பட்டன.

### 3.3.4 அலுகொல்ல வீதி பக்கச் சுவர் அபிவிருத்தி - ரூபா 98,780

------------------------------------------------------------------------------------------

மதிப்பீட்டு வேலை விடய இல. 06 இன் படி, கலவைச் சேர்க்கை 1:5 ஆகவும் வேலை விடப இல. 08 இன் படி, பூச்சிடல் கலவைச் சேர்க்கை 1:3 ஆகவும்

மதிப்பிடப்பட்டு இதற்காக ரூபா 31,825 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பூச்சிடல் மிகவும் எளிதாக கையால் உடைக்கக்கூடிய நிலையில் நலிவான சீமேந்து மற்றும் மண் கலவை இடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

### 3.4 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நாளாந்தம் சேரும் திண்மக் கழிவுப் பொருட்களும் குருதுவத்தை நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளும் தெரிவு செய்யப்பட்டு உக்கும் கழிவுப் பொருட்கள் குருதுவத்தையில் உள்ள ஜீவ வாயு அலகிற்காக வழங்கப்படுகின்றது. எஞ்சும் சகல கழிவுப் பொருட்களும் முகாமைத்துவம் இன்றி உவபனை மற்றும் தொலொஸ்பாகே கழிவு அகற்றும் இடத்தில் அகற்றப்படுவதாக 2016 யூன் 15 ஆம திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது வருமானம் மற்றும் செலவின விடயங்களிற்கு இடையே ஏற்பாடுகள் மாற்றப்பட்ட பின்னரும், பாதீடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கு இடையிலும் 18 வருமான விடயங்களிற்கு இடையே 20 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையும் 42 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 12 செலவின விடயங்களுக்காக பாதீடப்பட்ட ஏற்பாடு ரூபா 666,000 தொகை முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 05 வருமான விடயங்களுக்காக பாதீடப்பட்ட வருமானத் தொகையான ரூபா 606,800 தொகையால் எந்தவித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த ஏற்பாட்டுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்து முகாமைத்துவம்

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான செத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ரூபா 25,582,326 பெறுமதியான 10 வாகனங்கள், இயந்திர மற்றும் உபகரணப் பொருட்கள் 01 வருடத்திற்கு மேலான காலமாக விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஆ) இரண்டு மாடிகளைக் கொண்ட பழைய பிரதேச சபைக் கட்டிடத்தில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத 4750 அடி அளவிலான இடம் ஏற்ற

நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படாது ஒரு வருடமாக விளைவற்றுக் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த கட்டுப்பாடு